2. தகவல் கோரல்

(அ) மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் டெல்டா மாவட்ட கடைமடைப் பகுதிகளுக்குச் சென்று சேராதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், என்னவென்று சொல்லுங்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.*

முற்பகல் 11–25

*__திரு. துரை. சந்திரசேகரன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் பாசனப் பகுதி இன்றைக்கு மிகப் பெரிய கேள்விக்குறியாக மாறி இருக்கிறது. அதனால், மேட்டூர் பாசனப் பகுதியினுடைய விவசாயிகள் பாதிக்க இருக்கின்ற சூழ்நிலையை அரசின் கவனத்திற்கு, அதாவது மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவது என் கடமை. இந்தச் சட்டமன்றம் தொடங்கிய அன்று இந்தப் பகுதியில் காவேரி டெல்டா மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவரிடம் இந்தப் பிரச்சினையை நீங்கள் பேச வேண்டும். அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். தொண்டைக் கதிர்களாக இருக்கின்ற பயிர்கள் இன்றைக்கு காய்ந்து வருகின்ற நிலை இருக்கின்றது என்று குறிப்பிட்டார்கள். பல்வேறு பிரச்சினைகளை எடுத்துரைக்கின்ற எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர், சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசுகின்ற வாய்ப்பினை எனக்கு வழங்கியதற்கு முதலில் அவருக்கு என்னுடைய பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூரில் அக்டோபர் 2 ஆம் தேதியும், கல்லணையில் 5 ஆம் தேதியும், அதேபோல மாயனூர் புதிய கட்டளையில் 7 ஆம் தேதியும் தண்ணீர் திறக்கப்பட்டது. உண்மை நிலை என்னவென்றால் திறக்கப்பட்ட தண்ணீர் இன்று வரையில் நாகப்பட்டினம், திருவாரூர், அதேபோல தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணி, பட்டுக்கோட்டை பகுதிகளில் கடைமடைக்கு இந்த நிமிடம் வரை ஒரு சொட்டுத் தண்ணீர்கூட செல்லவில்லை. இதை அரசு அறியுமா? இதற்கு என்ன காரணம்? நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுப் பணித்

துறையை வைத்திருக்கிறார். அதேபோல துணை முதலமைச்சராக இருந்தவர், ஏற்கெனவே பொதுப் பணித் துறையை நிருவகித்தவர். என்னுடைய கேள்வி என்னவென்றால், கடைமடைப் பகுதிகளுக்கு இன்னும் தண்ணீர் போகவில்லை. இதுதான் உண்மை நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதோடு நில்லுங்கள்.

திரு. துரை. சந்திரசேகரன்: அதோடு இல்லை. சொல்ல வேண்டும். இங்கே நாங்கள் தண்ணீர் இல்லாமல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதோடு முடியுங்கள்.

திரு. துரை. சந்திரசேகரன்: தண்ணீர் இல்லை என்று சொல்வதே பிரச்சினை என்றால் எப்படி? விவசாயம் செய்த பகுதிகளில், பல ஏக்கர்களில் நெற்பயிர் தொண்டைக் கதிராக இருக்கிறது. ஒரு முறையாவது தண்ணீர் விடவேண்டும். அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், ஐப்பசி மாதம் 30 ஆம் தேதி முதல் கார்த்திகை மாதத்தில் கிட்டத்தட்ட ஒரு வார காலம் புனித நீராடுவதற்கு தண்ணீரைத் திறந்து waste செய்துவிட்டார்கள். அதேபோல இப்பொழுது திறந்து விடப்பட்ட தண்ணீரும் முழுமையாக வந்து சேரவில்லை. அதைத்தான் நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சருடைய favourite நடிகர் சொன்னதுபோல system–ல் எங்கேயோ தப்பு நடக்கிறது. இந்தப் பாசன system–ல் உண்மையாகவே தவறு நடக்கிறது. நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த எங்களுடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் 1997 ஆம் ஆண்டு நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது, இதேமாதிரி புதிய கட்டளையில் தண்ணீர் திறந்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது இருக்கிற பிரச்சினையைப் பேசி முடியுங்கள்.

திரு. துரை. சந்திரசேகரன்: ஒரு நிமிடம் சார், சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் zero hour–ல்தான் உங்களை allow பண்ணி இருக்கிறேன். இது விவாதம் இல்லை. பேசுங்கள்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாயனூரில் தண்ணீர் திறக்க வேண்டும் என்று நாங்கள் முதலமைச்சரிடம் கேட்டோம். அப்பொழுது முதலமைச்சர் அவர்கள் பொதுப் பணித் துறை

2018 ஜனவரி 10] **[திரு. துரை. சந்திரசேகரன்]**

அமைச்சரைக் கூப்பிட்டு திறக்கச் சொன்னார். அப்பொழுது அவர் அரசாணையைக் காண்பித்தார். மேட்டூரில் தண்ணீர் 90 அடி இருந்தால்தான் நான் திறக்க முடியும். இப்பொழுது 86 அடிதான் இருக்கிறது. இன்னும் 4 அடி வரட்டும். திறக்கிறேன் என்று சொன்னார். கடைசிவரை திறக்கவில்லை. 97 அடி வந்ததற்குப் பிறகுதான் திறந்துவிட்டார். நான் எதற்கு இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், அமராவதி ஆற்றிலிருந்து நீர் திறப்பது சம்பந்தமாக 4 அரசாணைகள் போட்டீர்கள். டி.வி.–ஐத் திறந்தால் மாண்புமிகு முதலமைச்சர் அந்த வாய்க்காலைத் திறந்தார், இந்த வாய்க்காலைத் திறந்தார் என்று வருகிறது. ஆனால், உண்மையிலேயே எங்களுடைய காவேரி டெல்டா மாவட்டத்தினுடைய பழைய ஆயக்கட்டுதாரர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுதான் உண்மை. நான் குறையாக சுட்டிக்காட்ட விரும்பவில்லை. 15 ஆண்டுகளாகத் திறக்காத பல கால்வாய்களை நம்முடைய முதலமைச்சரின் உத்தரவின்பேரில் திறந்திருக்கிறீர்கள். எல்லா இடத்திலேயும் தண்ணீரைத் திறந்துவிட்டீர்கள். எங்களுக்கு கொஞ்சம் தண்ணீர் வந்தால் போதும் என்கின்ற நிலையில் நாங்கள் இருக்கிறோம். மத்திய அரசை வலியுறுத்தி அந்தத் தண்ணீரைப் பெறவில்லையென்றால், இதில் நீங்கள் ஏமாந்தீர்கள் என்றால், டெல்டா மாவட்டம் மிகப் பெரிய வறட்சியைச் சந்திக்க நேரிடும். நீங்கள் எவ்வளவுதான் வறட்சி நிவாரணம் கொடுத்தாலும் அதை ஈடு செய்ய முடியாது. அந்த மாவட்டத்தின் அமைச்சர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். அதைப்போல நாங்கள் சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் போகின்றபொழுது, இன்றைக்கும் உண்மையிலேயே பல இடங்களில், அதாவது உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால், 5000 கன அடி தண்ணீர் திறந்துவிட வேண்டிய காவேரியில் 500 கன அடி தண்ணீர்தான் இன்றைக்குக் காலையில் திறந்திருக்கிறீர்கள். கல்லணைக் கால்வாயில் 2500 கன அடி தண்ணீர் திறக்க வேண்டும். 500 கன அடிதான் திறந்திருக்கிறீர்கள். வெண்ணாறில் 500 கன அடிதான் திறந்திருக்கிறீர்கள். 6000 கன அடி திறந்தால்தான் தண்ணீர் பாயும். இப்பொழுது நீங்கள் திறக்கிற 1000, 1500 கன அடி தண்ணீரும் ஆற்றுக்குள் போகுமே தவிர வாய்க்கால்கள், ஏரிகளுக்குப் போகாது. அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. வாய்க்கால்கள் முறையாக வெட்டப்படவில்லை. பல இடங்களில் மணல் அள்ளுவதால் ஆறுகள் பள்ளமாகப் போய்விட்டன. எனவே, இதையெல்லாம் சரி செய்வதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். அரசு இதில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்றும் 4 வாரத்தில் தீர்ப்பு வரப்போகிறது என்று சொல்கிறார்கள். மத்திய அரசில் நல்ல செல்வாக்கு உள்ள முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகிய நீங்கள் பாரதப் பிரதமரை சென்று பாருங்கள் அல்லது நீதிமன்றத்தில் மனு போட்டு எப்படியாவது தண்ணீரைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். கர்நாடகா நமக்கு நூற்று சொச்சம் TMC தண்ணீர் தர வேண்டியிருக்கிறது. ஆனால், அவர்கள் இதுவரையில் தரவில்லை. அதில் 5, 6 TMC தண்ணீர் வாங்கித் தந்தால்கூட அந்தத் தண்ணீர் விவசாயிகளைப் பாதுகாக்கும். அந்த முயற்சியை அரசு எடுக்க வேண்டும்.

முற்பகல் 11–30

இப்போது நீங்கள் 2500 கன அடி தண்ணீர் திறந்துவிடுவது என்பது பயனளிக்காது. 10,000 கன அடி தண்ணீரையாவது திறந்துவிட்டு, வாரத்தில் ஒரு முறை எல்லோருக்கும் தண்ணீர் கொடுத்தால் போதும். அந்தப் பயிர்கள் விளைந்துவிடும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா படுகை மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, அரியலூர், புதுக்கோட்டை, கடலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் சம்பா மற்றும் தாளடி பருவத்தில் சுமார் 14.93 இலட்சம் ஏக்கர் பரப்பில் நெற்பயிரானது சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. நடப்பு 2017–2018 ஆம் ஆண்டில் சம்பா பருவ சாகுபடிக்காக 2–10–2017 அன்று மேட்டூர் அணை திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட பாசன நீரைக் கொண்டும், வட கிழக்குப் பருவ மழையினைக் கொண்டும் நேரடி நெல் விதைப்பினை ஊக்குவிக்கும் வகையில் 41.15 கோடி ரூபாய் நிதியொதுக்கீட்டில் சம்பா தொகுப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்தத் தொகுப்புத் திட்டத்தினைப் பயன்படுத்தி, இதுவரை 12.83 இலட்சம் ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் 19,000 ஏக்கர் நெற்பயிர் அறுவடை செய்யப்பட்டும், எஞ்சியுள்ள 12.64 இலட்சம் ஏக்கர் பரப்பில் தற்போது சுமார் 4.64 இலட்சம் ஏக்கர் அறுவடைக்குத் தயார் நிலையிலும் உள்ளது. மீதமுள்ள 8 இலட்சம் ஏக்கர் நெற்பயிரில் சுமார் 2.15 இலட்சம் ஏக்கர் நிலம் நிலத்தடி நீரினை ஆதாரமாகக் கொண்டுள்ளது. எஞ்சியுள்ள 5.85 இலட்சம் ஏக்கர் நெற்பயிரினை முழுமையாக அறுவடை செய்ய

2018 ஜனவரி 10] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

26.75 டி.எம்.சி. நீர் தேவையாக உள்ளது. 3 இலட்சம் ஏக்கர் பரப்புக்கு ஒரு முறை பாசனமும், 2.85 ஏக்கர் நிலப் பரப்புக்கு இரு முறை பாசனமும் அவசியமாகிறது. தற்போது மேட்டூர் அணையில் நீரின் அளவு 21.70 டி.எம்.சி. ஆக உள்ளது. காவேரி நதி நீர்ப் பங்கீட்டின்படி கர்நாடக அரசு ஆண்டுதோறும் தமிழ்நாட்டிற்கு 192 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டும். இதுநாள்வரை 111 டி.எம்.சி. தண்ணீர்தான் வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள 81 டி.எம்.சி. தண்ணீர் 2018 மே மாதத்திற்கு முன்பாக வழங்க வேண்டியுள்ளது. தீர்ப்பாய ஆணையின்படி தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய மீதமுள்ள நீரைப் பெறுவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு கர்நாடக அரசிடம் நேரடியாகவும், மத்திய அரசின் மூலமாகவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தவிர, உச்ச நீதிமன்றத்தின் மூலம் நிவாரணம் பெற தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், தற்போது இருப்பிலுள்ள தண்ணீரைக் கொண்டு அதிக பாசன நீர் தேவைப்படும் பகுதிகளுக்கு சீராக விநியோகம் செய்து, சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிரினை முழுமையாக அறுவடை செய்திட சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளேன். இருப்பினும், நேற்று இரவு தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டங்களிலெல்லாம் மழை பெய்திருக்கின்றது. மேலும், கால்வாயில் பகிர்ந்தளிக்கப்படும் பாசன நீரை சிக்கனமாக விவசாயிகள் பயன்படுத்திட வேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடும்போது, அமராவதி அணை தண்ணீர் திறப்பது குறித்து 4 அரசாணைகள் வெளியிட்டதாகச் சொன்னார்கள். நீர் இருக்கின்ற அளவைப் பொறுத்துத்தான் தண்ணீர் திறந்துவிட முடியும். அதையெல்லாம் கருத்திலே கொண்டுதான் பெய்கின்ற நீரை அளவாகக் கொண்டு, எந்தெந்த வாய்க்காலில் எவ்வளவு தண்ணீர் விடவேண்டுமென்று முறைப்படுத்தி, அதற்குத் தக்கவாறு அரசு திறந்துவிடுகிறது. விவசாயிகளின் நலன் கருதி இருக்கின்ற நீரினுடைய அளவை வைத்துத்தான் அரசு அதை வெளியிட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, நமக்குக் கிடைக்க வேண்டிய நீர், அதாவது, கிட்டத்தட்ட கர்நாடக அரசு 81 டி.எம்.சி. நீர் வழங்க வேண்டும் இந்த மே மாதத்திற்குள். எவ்வளவோ போராடினோம். இன்னும்

கிடைக்கவில்லை. நான் குறிப்பிட்டவாறு, அரசு தொடர்ந்து, மத்திய அரசின் மூலமாகவும் நேரடியாகவும் கர்நாடக அரசிற்கு அழுத்தம் கொடுத்துக்கொண்டிருக்கின்றது. உச்ச நீதிமன்றத்திலும் இடைக்கால மனு தாக்கல் செய்தோம். இன்னும் 4 வாரத்திலே நம்முடைய காவேரி மேலாண்மை வாரிய ம் அமைப்பது குறித்த தீர்ப்பு வழங்கப்படவுள்ளதாக உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஆகவே, அரசைப் பொறுத்தவரைக்கும் விவசாயிகளுக்கு தண்ணீர் பெற்றுத் தருவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) திண்டுக்கல் மாவட்டம், தாண்டிக்குடி ஊராட்சி, யானை தாக்கி இறந்த மூக்கம்மாள் என்ற பெண்மணிக்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில்குமார் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. மதிவாணன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. செந்தில்குமார், நீங்கள் சொல்லுங்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *முக்கியமான விஷயம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முக்கியமானது என்பதால்தான் நான் உங்களைப் பேச அனுமதித்துள்ளேன். சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

முற்பகல் 11–35

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். திண்டுக்கல் மாவட்டம், பழனி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாண்டிக்குடி ஊராட்சியைச் சேர்ந்த 55 வயது மதிக்கத்தக்க மூக்கம்மாள் என்கிற பெண் 9–1–2018, நேற்று நண்பகல் அவர்களுடைய காபித் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கின்றபோது அந்தப் பகுதியில் வந்த யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்திருக்கிறார். அவருக்கு இழப்பீடு வழங்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று*